**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 117** **நாள்: 04.06.2025**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் தலைமையில் சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0 ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் இன்று (04.06.2025) நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் வாஷ் லேப் (Washlab), சியர் (Cheer) மற்றும் ரீசைக்கிள் பின் (Recycle Bin) அமைப்புகள் இணைந்து நடத்தும் சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0 மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் தலைமையில் இன்று (04.06.2025) ரிப்பன் கட்டட வளாகம், அம்மா மாளிகை கூட்டரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு மேயர் அவர்கள் சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0க்கான இலச்சினையினை வெளியிட்டார். தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் திறந்தவெளியினை சிறுநீர் மற்றும் மலம் கழித்தல் என கழிப்பிடமாகப் பயன்படுத்தும் இடங்களைக் கண்டறிந்து வரைபடமாக்குதல், விழிப்புணர்வுப் பிரச்சாரம் (#OnceinAloo), கழிவறைகளைத் தத்தெடுத்தல் மற்றும் அமைத்துத் தருதல் (Adopt a Toilet / Donate a Toilet), கழிப்பறைகளைப் பராமரிக்க பொதுமக்கள், நிறுவனங்கள், சமூக அமைப்புகளை ஊக்குவிக்கும் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளைத் தொடங்கி வைத்தார்.

ஒரு மாதம் முழுவதும் நடைபெறும் இந்த சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0வில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு முக்கியமான நிகழ்வுகள் மூலம் கழிப்பறை பற்றிய உரையாடல்கள் சென்னை மாநகரம் முழுவதும் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரத்தின் மாற்றத்திற்காக கழிப்பறைகள் பற்றி பல கோணங்களில் பேசி, விவாதித்து, மாற்றத்திற்கான ஒரு வாய்ப்பினை உருவாக்க ஏதுவாக, இந்நிகழ்வில் பங்கேற்க ஊடகத்தினர், கல்வி நிறுவனங்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

இந்நிகழ்வில் மதிப்பிற்குரிய துணை மேயர் திரு. மு.மகேஷ் குமார், ஆணையாளர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., தூய்மை தமிழ்நாடு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ஆர்.வி. ஷஜீவனா, இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெயசந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர்கள் திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., (தெற்கு), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு), தலைமைப் பொறியாளர் (பொது) திருமதி எஸ். ராஜேஸ்வரி, வாஷ்லேப் நிறுவனர் கங்கா திலீப், இயக்குநர் திரு.செபின் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**இந்நிகழ்வில் மாண்புமிகு மேயர் அவர்கள் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது:**

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் வாஷ் லேப் (Washlab), சியர் (Cheer) மற்றும் ரீசைக்கிள் பின் (Recycle Bin) அமைப்புகள் இணைந்து பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கழிப்பறை குறித்த விழிப்புணர்வினை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0 இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தன்னார்வலர்களின் ஆய்வு பயன்பாட்டிற்காக கழிப்பிடத்திற்கான செயலியினை 2022ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்கள்.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் எந்தெந்த இடங்களில் கழிப்பிடங்கள் உள்ளன. கழிப்பறைகள் இருந்தும் என்ன காரணத்தினால் வெளி இடங்களில் சிறுநீர் கழிக்கின்றனர். வெளி இடங்களில் சிறுநீர் கழிப்பதினால் பொதுமக்களுக்கு என்னென்ன பாதிப்புகள், இடையூறுகள் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுகிறது என பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இன்று (04.06.2025) தொடங்கி, ஜூலை 5ஆம் தேதி வரை ஒரு மாத காலத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது.

இந்த விழிப்புணர்வு நிகழ்வானது, சியர் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவினர் மாநகராட்சி அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து பொது இடங்களில் சிறுநீர் கழிக்கக்கூடிய இடங்களைக் கண்டறிந்து, அவ்விடங்களில் வண்ண சுவர் ஓவியங்கள் வரைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், பொது இடங்களில் சிறுநீர் கழிப்பதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படவுள்ளது.

பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களில் போதுமான அளவில் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பிரத்யேகமாக பெண்களுக்கென நடமாடும் வகையிலான She Toiletகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த She Toiletகளில் தாய்மார்கள் பாலூட்டும் அறை, நாப்கின் அறை, உடை மாற்றும் அறை மற்றும் கழிவறை உள்ளிட்ட அறைகள் உள்ளன. தியாகராய நகரில் போதுமான அளவில் கழிப்பிடங்கள் உள்ளன. மேலும், பொதுமக்கள் கூடுதலாக தேவைப்படுகிறது எனக் கோரிக்கை வைக்கும் பட்சத்தில் கூடுதலாக கழிப்பிடங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 1400 இடங்களில் கழிப்பிடங்கள் உள்ளன. ஒவ்வொரு கழிப்பிடங்களிலும் 5 முதல் 10 வரையிலான கழிப்பறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இராயபுரம், திரு.வி.க.நகர் மற்றும் தேனாம்பேட்டை ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட கழிப்பிடங்கள் தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த மண்டலங்களில் தனியார் நிறுவனத்தின் மூலம் சுழற்சி முறையில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, தூய்மை மற்றும் சுகாதாரப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கழிப்பிடங்களை தவறான முறையில் பயன்படுத்துவதைத்

தவிர்க்கும் வகையில் இந்தக் கழிப்பிடங்களில் வெளிப்புறம் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டு, தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

பொது இடங்களில் சிறுநீர் கழிப்பதை முற்றிலும் தவிர்க்கும் வகையிலும், பொதுக்கழிப்பிடங்களைப் பயன்படுத்தும் வகையிலும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு தனிநபரிடமும் திறந்தவெளி இடங்களில் சிறுநீர் கழிக்கக் கூடாது என்ற விழிப்புணர்வு இருக்க வேண்டும். குழந்தைகள், முதியோர் மற்றும் பெண்கள் அவ்விடங்களில் கடந்து செல்லும் போது தொற்று ஏற்படும் நிலை உருவாகும். இதனைத் தவிர்த்திடும் வகையில் திறந்தவெளி இடங்களில் சிறுநீர் கழிப்பதைத் தவிர்த்து, பொதுக் கழிப்பிடங்களைப் பயன்படுத்திட வேண்டும் எனத் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**